26.09.2025

# கணினி செயல் திட்டம் விழிப்புணர்வு கருத்தரங்கு

புதுக்கோட்டை ஜெ.ஜெ. கலை அறிவியல் கல்லூரியின் (தன்னாட்சி), கணினி அறிவியல் மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் துறை இறுதி ஆண்டு மாணவர்களுக்கு கணினி செயல் திட்டம் விழிப்புணர்வு கருத்தரங்கு 26.09.25 இன்று நடைபெற்றது. கருத்தரங்கில் தஞ்சாவூர் சியான் ஆராய்ச்சி நிறுவன இயக்குநர் திரு. சண்முகராஜா மற்றம் பயிற்றுனர் திரு. லோகேஸ்வரன் கலந்துகொண்டு மாணாக்கர்களுக்கு கருத்துரை வழங்கினர்.

கணினி செயல் திட்டம் உருவாக்கம் பற்றி சிறப்பாக விளக்கம் அளித்தார்கள். இதில் 320 மாணவர்கள் கலந்து கொண்டு பயன் பெற்றனர். இந்நிகழ்ச்சிக்கு கல்லூரி முதல்வர் முனைவர் ஜ.பரசுராமன் அவர்கள் தலைமை தாங்கினார். முன்னதாக துணை முதல்வர் மற்றும் கணினிதுறைத் தலைவர் முனைவர் S.சுதா வரவேற்க, தகவல் தொழில்நுட்பவியல் துறைத் தலைவர் முனைவர் இரா.மணிமாறன் நன்றி கூறினார்.